# தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
# தலைமை அலுவலகம்:: சென்னை – 600 035.

## கருணை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் ஆயுள் சரிபார்ப்பு – டிசம்பர் 2018

## முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஓய்வு பெற்ற பணியாளர்கள் / வாரிசுதாரர்களுக்கு வழங்கி வரும் கருணை ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியதிற்கான ஆயுள் சரிபார்ப்பு (Life Verification) டிசம்பர் 2018 மாதத்தில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் வழங்க கீழ்கண்டவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:–

1. ஏற்கனவே ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதிய வழங்கு ஆணையில் (Pension / Family Pension Payment Order) குறிப்பிட்டுள்ளவாறு ஓய்வூதியதாரர் பணி ஓய்வு / மரணம் அடையும்போது பணியாற்றிய இணைய அலகில் (Federation Unit) நேரில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் ஓய்வூதிய வழங்கு ஆணையுடன் ஆஜராகி ஆயுள் சரிபார்ப்பு சான்றிதழ் வழங்கலாம்.

2. மாற்று ஏற்பாடாக உடல் நலன் போன்ற காரணத்தினால் கடைசியாக பணியாற்றிய இடத்திற்கு செல்ல இயலாத கருணை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் விருப்பப்படி தாங்கள் தற்சமயம் வசித்து வரும் இடத்திற்கு அருகாமையிலுள்ள மாவட்ட ஒன்றிய அலுவலகம் அல்லது கீழ்கண்ட இணைய அலகு (Federation Unit) அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆயுள் சரிபார்ப்பு சான்றிதழ் வழங்கலாம்.

### இணைய அலகுகள்

- தலைமை அலுவலகம், சென்னை
- இணை நிர்வாக இயக்குநர் அலவலகம், அம்பத்தூர்
- அம்பத்தூர் பால் பண்ணை, அம்பத்தூர்
- உபபொருள் உற்பத்தி பிரிவு, அம்பத்தூர்
- மத்திய பால் பண்ணை, மாதவரம்
- போக்குவரத்து பிரிவு, மாதவரம்
- நந்தனம் விற்பனை பிரிவு, சென்னை
- சோழிங்நல்லூர் பால் பண்ணை, சென்னை
- எருமையின உறைவிந்து நிலையம், ஈரோடு
- வம்சாவழி சோதனை திட்டம், ஈரோடு
- கருவூல ஜெர்சி பொலி காளை பண்ணை, ஊட்டி
- திருவண்ணாமலை பால் பவுடர் உற்பத்தி அலகு, திருவண்ணாமலை

அவ்வாறான மாற்று ஏற்பாட்டின்கீழ் மாவட்ட ஒன்றியம் / பிற இணைய அலகில் ஆயுள் சரிபார்ப்பு சான்று வழங்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊழியர் எண், ஓய்வூதிய வழங்கு ஆணை எண் (Pension / Family Pension Payment Order No), தற்போதைய முகவரி, ஆயுள் சரிபார்ப்பு சான்றிதழ் வழங்க விரும்பும் மாவட்ட ஒன்றியத்தின் / இணைய அலகின் பெயர் குறிப்பிட்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் தலைமை அலுவலகம், 7வது தளம், ‘‘ஆவின் இல்லம்’’, எண். 3, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை, நந்தனம், சென்னை – 35 என்ற முகவரிக்கு எழுத்து மூலமான கடிதம் அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

// நிர்வாக இயக்குநர் ஆணையின்படி//